**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண்.52/2015**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு மார்ச் மாதம் **04** -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 04.03.2024**

**பெயர் - ரத்தினாபாய்**

**க/பெ - வெங்காரெட்டி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 3.00. p.m.**

**கூடுதல் முதல் விசாரணை** -

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் கூடுதல் பிரமான பத்திரம் மூலம் கூடுதல் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (10) 16.12.1965 தேதியிட்ட செஞ்சுராகவரெட்டி என்பவர் பெயரில் உள்ள கிஸ்து ரசீதின் அசல் **(மேற்படி ஆவணம் குறித்து வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என பிரதிவாதிகள் 1 ,2 மற்றும் 7 முதல் 9 தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனைக்குட்ப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) (வா.சா.ஆ10)** எனவும் .

(11). 11.08.1964 தேதியிட்ட செஞ்சுராகவரெட்டி மனைவி கமளம்மாள் பெயரில் உள்ள பிாவு 9(2) நோட்டிஸ் அசல் **(மேற்படி ஆவணம் குறித்து வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும் அதில் சரியான முத்திரை இடம் பெறவில்லை பிரதிவாதிகள் 1 ,2 மற்றும் 7 முதல் 9 தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனைக்குட்ப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) (வா.சா.ஆ11)** எனவும். குறியீடு செய்யப்படுகிறது.

**<u>பிரதிவாதிகள் 1 , 2 மற்றும் 7 முதல் 9 தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

1. நான் தற்போது தாக்கல் செய்துள்ள 2 ஆவணங்களை குறித்து எனது வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான், அப்போது அந்த ஆவணங்கள் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை தற்போது தான் கிடைத்தன. பொதுவாக ஒரு கிஸ்து ரசீதில் பட்டா யார் பெயரில் உள்ளதோ அவர்கள் பெயர்தான் ரசீதில் மேலே எழுதப்படும் என்றால் எனக்கு தெரியாது. நான் போட்ட வா.சா.ஆ10 ல் எனது தந்தையாரான செஞ்சுராகவரெட்டி பெயர் தான் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ10 - ல் கண்ட கிஸ்தினை யார் செலுத்தினார் என்றால் எனது தந்தையார் தான் செலுத்தினார். வா.சா.ஆ11 ல் கமளம்மாள் என்ற பெயர் மடடும் வேறு பேனா மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. எனது தயாருக்கு அச்சொத்து கிடைத்ததாக எனது வழக்குரையில் நான் கூறியுள்ள நிலையில் அது எவ்வாறு கிடைத்தது என்றால் அதை அவர்கள் கிரையம் பெற்றார்கள். யாரிடம் இருந்து கிரையம் பெற்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தைவழி பாட்டனாரின் பெயர் செஞ்சுநாரயணரெட்டி என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தையின் தயார் பெயர் வெங்கடராகவம்மாள் என்றால் சரிதான். எனது தந்தை உடன் பிறந்தவர்கள் செஞ்சுகிருஷ்ணா ரெட்டி மற்றும் வெங்கட்ரெட்டி என்றால் சரிதான். மேற்படி செஞ்சுகிஷ்ணாரெட்டிக்கு சங்கரவம்மாள் மற்றும் மோட்சம்மாள் என்று இரு மகள்கள் உள்ளனர் எனற்ால் சரிதான். சங்கரம்மாள் வாரிசு இல்லாமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். மோட்சம்மாளின் 2 மகள்கள் தான் பிரதிவாதிகள் 1 மற்றும் 2 என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்து எனது தயார் வாங்கிய சொத்து அல்ல என்றும் எனது தந்தை செஞ்சுராகவரெட்டி மற்றும் அவரது சகோதரர்களின் கூட்டு குடும்ப சொத்து என்றால் சரியல்ல. அதனால் தான் வா.சா.ஆ 10 ல் எனது தந்தையார் பெயர் வருகிறது என்றால் எனது தந்தையார் தான் மேற்படி சொத்தை வாங்கி எனது தயார் பெயரில் எழுதினார். எனது தந்தையார் யாரிடம் இருந்து மேற்படி சொத்தை கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. எனது தந்தையைார் சொத்தினை தாயார் பெயர்க்கு வாங்கியதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி தாவா சொத்து எனது தந்தை மற்றும் அவரது உடன்பிறந்தவர்களின் கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் தான் எனது தந்தை பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும் அது வா.சா.ஆ10 ல்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. எனது தயார் 09.05.1958 ல் காலமானதாக வா.சா.ஆ1 ஐ தாக்கல் செய்துள்ளேன் என்றும் ஆனால் அந்த ஆவணம் 3.8.1989 ல் தான் பதிவு ஆகி உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ2 எனது தந்தை 27.05.1981 ல் காலமானதாக குறிப்பிடப்பட்டு இருப்பினும் அதை 03.08.1989 தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக ஒருவர் இறந்து விட்டால் 14 நாட்களுக்குள் அது பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் தவறினால் நீதிமன்ற உத்தரவு பெற்றே பதிவு செய்ய இயலும் என்றும் அது போல் நீதிமன்ற உத்தரவு எதுவும் பெற்றோமா என்றால் எனக்கு தெரியாது. இது குறித்து எந்த விளக்கமும் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ11 பிரிவு 9(2) அறிவிப்பு என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ11 குறித்து வழக்குரையில் நான் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ11 தேதி அன்று எனது தயார் உயிருடன் இருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. எனது தாயாரின் சொந்த ஊர் ஆந்திர மாநிலம் ஆகும்.

5. எனது தயாருக்கு வழக்கு சொத்தினை தவிர மீஞ்சூரில் வேறு நிலங்கள் இருந்ததா என்றால் இல்லை. வா.சா.ஆ11 ல் வழக்கு சொத்து அல்லாது வேறு 3 சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவை யாருடைய சொத்துக்கள் என்றால் தெரியாது. நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள்படியும் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் ஆவணங்களின் படியும் வழக்கு சொத்தின் உரிமையோ அனுபவமோ எனக்கு உள்ளதாக நான் கோர இயலாது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 3.35 p.m.**